# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## Pr.O.P.No. 80/2023

சாட்சி : PW– 1
பெயர் : திருமதி. வத்சலா தேவி தேதி : 19.08.2024

**குறுக்குவிசாரணை** :– ( 1 மற்றும் 5 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் )

என் கணவர் எனக்கு உயில் எழுதி வைத்துள்ளார். 06.02.2020ம் தேதி உயில் எழுதி வைத்துள்ளார். 07.05.2021ல் கணவர் நெஞ்சுவலியால் இறந்துவிட்டார். மனு சொத்து என்கணவர் சுயமாக வாங்கிய சொத்து. அதன் சர்வே நெம்பர் தெரியாது. விஸ்தீரணம் 550 சதுர அடி. என் கணவருக்கு நானும் எதிர்மனுதாரர்களும்தான் வாரிசுகள் என்றால் ஆமாம். எனக்கு எந்த ஆதாரமும் இல்லை மற்ற நபர்கள் நல்லபடியாக திருமணம் செய்து நன்றாக வாழ்ந்து வருகிறார்கள். அதனால் என் பெயருக்கு என் கணவர் உயில் எழுதி வைத்தார். மனு சொத்தில் நான் குடியிருந்து வருகிறேன். மகன் மற்றும் மகள்கள் திருமணம் செய்து கொண்டு தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள்.

உயில் எங்கு எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் கணவர் இறந்து 10வது நாள் சாமி கும்பிட்டபொழுது என் கணவர் எழுதிவைத்த உயில் பற்றி தெரிய வந்தது. உயில் எழுதும்போது நான் உடன் இருக்கவில்லை. செல்லதுரை என்பவர் உயிலை படித்து சொன்னார். அவர் என்கணவரின் நண்பர். அந்த உயிலில் செல்லதுரை பாலசுப்பிரமணியன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். உயில் பத்திரத்தில் எழுதப்பட்டதா வெறும் காகிதத்தில் எழுதப்பட்டதா என்று எனக்கு தெரியாது. ரூ.20 மதிப்புள்ள பத்திரத்தில் எழுதப்பட்டது. அது எத்தனை பக்கத்தில் எழுதப்பட்டது என்று தெரியாது.

**குறுக்குவிசாரணை** :– ( 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் )

நான் 7ம் வகுப்பு படித்துள்ளேன். எழுதப்படிக்க தெரியும். முதல்விசாரணை பிரமாண பத்திரிக்கை யார் தயார் செய்தார் என்றால் வக்கீல் சொல்லி தயார் செய்தார்கள். என் கணவர் உயில் எழுதி வைத்துள்ளார். அதற்காக மனு

போட்டுள்ளேன். உயில் சொத்து என்கணவருக்கு எந்த ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்றால் என்கணவர் விலைக்கு வாங்கினார். என் கணவர் எங்கள் குழந்தைகள் அனைவரின் மீதும் பாசமுடன் இருந்தார் என்றால் ஆமாம். உயில் ஆவணம் பீரோவில் இருந்தது. அந்த பீரோவை நான் திறந்து பார்க்கவில்லை. எனக்கும் என் கணவருக்கும் சுமூகமான உறவு இல்லை என்றால் சரியல்ல. செல்லதுரை சொன்னபிறகு உயில் எடுத்து பார்த்தேன். செல்லதுரை படித்துக் காண்பித்து விவரம் சொன்னார். 07.05.2021ம் தேதி படித்துக் காண்பித்தார். உயில் பத்திரம் எங்கு வாங்கினார் என்று எனக்கு தெரியாது. சாட்சியிடம் உயிலை காட்டி அதில் நோட்டரி வழக்கறிஞரிடம் பதிவுசெய்ததாக பதிவு எண் குறிப்பிடவில்லை என்று வினவ சாட்சி அதைப்பற்றி தெரியாது என்று கூறுகிறார். செல்லதுரை உயில் எங்கு தயார் செய்ததது என்று சொல்லவில்லை. என் கணவருக்கு உயில் சொத்தை தவிர வேறு சொத்து இல்லை. உயில் சாசனத்தில் கண்டுள்ள கையெழுத்து என் கணவருடைய கையெழுத்து இல்லை என்றும், அவைகளை நான் மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. உயில் பற்றிய விவரம் தெரியவந்து 1 –1/2 வருடம் கழித்து மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். உயில் மோசடியாக தயார் செய்யப்பட்டதால்தான் காலதாமதமாக மனு போட்டிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பீரோவில் உயில் உள்ளதாக யார் சொன்னார்கள் என்றால் செல்லதுரை சொன்னபிறகு நான் பீரோவை திறந்து பார்த்தேன்.

<u>2, 4 எதிர்மனுதாரர்தரப்பில் குறுக்குவிசாரணை</u> :–

உயில் எழுதிய சமயத்தில் கணவரின் வயது 74 – 75 இருக்கும். எதிர்மனுதாரர்கள் என்கணவருக்கும் எனக்கும் வாரிசுகள். என்கணவர் எங்குவைத்து உயில் எழுதினார் என்று எனக்கு தெரியவந்தது. என் கணவர் கொரோனாவினால் உயிர் இழந்தார் என்றும், அதை மறைத்து அவர் நெஞ்சுவலியில் இறந்தார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயில்

சொத்து வீட்டில் நான் வசித்து வருகிறேன். மகன் சக்திவேல் (1ம் எதிர்மனுதாரர்) என்னை பார்த்துக்கொள்கிறார்.

எதிர்மனுதாரர்களுக்கு வழக்கறிஞர் மூலமாக கடிதம் அனுப்பி உயில் எழுதியதை தெரியபடுத்தினோம். வரி கட்டுவதற்காக சென்றபொழுது என்கணவரின் பெயரில் உள்ள சொத்தை அவர் இறந்துவிட்டதால் அவரது பெயரில் கட்டமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். என் கணவர் வரி கட்டி வந்தார். செல்லதுரை , பாலசுப்பிரமணியம் உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். உயிலை தயாரித்தவர் யார் என்று தெரியாது. உயில் எழுதிய பின்பு என் கணவர் ஆரோக்கியமாக இருந்தார் என்றால் ஆமாம். கொரோனாவில் பாதிக்கப்பட்டு என் கணவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருடன் நான் வசித்து வருவதால் அவருடைய அறிவுரையின்பேரில் உயிலை போலியாக தயார் செய்து இந்த மனு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் கணவர் கையெழுத்திட்ட வேறு ஆவணங்கள் என்வசம் இல்லை. வேறு ஆவணங்கள் உள்ளது என்றும் அதை தாக்கல் செய்தால் உயிலில் உள்ளது என் கணவருடைய கையெழுத்து அல்ல என்று தெரிய வரும் என்பதால் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களுடன் மனு தாக்கல் செய்யும் வரை நல்ல உறவுமுறை இருந்தது என்றால் ஆமாம். உயிலில் உள்ள கையெழுத்து என்கணவருடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.